சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் புனித மைக்கேல் கல்லூரி வளாகத்தில் தமிழக முதல்வரின் புதுமைப் பெண் திட்ட விரிவாக்கத்தை முன்னிட்டு மாணவிகளுக்கு வங்கிக்கான காசோலையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், திருமதி தமிழரசி ரவிகுமார் எம்.எல். ஏ. கல்லூரி தாளாளர் ஸ்டாலின் ஆரோக்கியராஜ் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளார்கள்.

பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில், இலவச மருத்துவ முகாம்!

துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. துவக்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜன. 1 -

பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாம், பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., கலந்து கொண்டு, இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம், கண் சிகிச்சை, அக்குபஞ்சர் சிகிச்சை, உள்ளங்கால் சிகிச்சை ஆகியவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். 45 பேருக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாவட்டக் கழக செயலாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்விராஜேந்திரன், அழகு. நீலமேகம், ஆர்.முருகேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத்,

நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், ஒன்றிய பெருந்தலைவர்கள் க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், அ.அப்துல்கரீம் மா.பிரபாகரன், டி.ஆர்.சிவசங்கர், ஆர்.அருண், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால்,

பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலட்சுமி சேகர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பா.ரினோ பாஸ்டின், தமிழ்வேந்தன்,

மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணி வாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கேரள மாநிலம் - புனலூர் தொகுதி - அம்பநாடு எஸ்டேட் முதல்

தென்காசி வரை அரசுப் பேருந்துகள்: அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைக்கிறார்!

மாநில அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

கொல்லம், ஜன. 1 -

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதி அம்பநாடு எஸ்டேட் முதல் தென்காசி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்கம் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைக்கிறார் என மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அது வருமாறு:

கேரள மாநிலம் முழுவதும் பல மாவட்டங்களிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் குறிப்பாக தமிழ் மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் கொல்லம் மாவட்டம் ஒன்றாகும். குறிப்பாக கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் அம்பநாடு, ஆரியநாடு, ஆரியங்காவு என்று பனிரெண்டு எஸ்டேட் உள்ளது. இந்த எஸ்டேட்டுகளில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியை பூர்வமாக கொண்ட இலங்கையில் இருந்து வந்து குடியேறிய தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் சுமார் முப்பத்தி ஐந்து சதவீதம் பேர் தமிழர்கள் வாழ்ந்து வரும் தொகுதியாக புனலூர் விளங்கி வருகிறது இந்த தமிழக மக்கள் அனைவரும் தமிழக முதல்வர் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு தமிழக முதல்வர் அவர்களை கொண்டாடி வருகின்றனர்.

அண்மையில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கேரள மாநில திமுக சார்பில் ஆரியங்காவு பகுதியில் பிறந்தநாள் விழா கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன், தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் ஆகியோரிடம் அம்பநாடு, ஆரியநாடு உள்ளிட்ட பனிரெண்டு எஸ்டேட்டில் வாழும் தமிழ் மக்கள் தங்களுக்கு அம்பநாடு எஸ்டேட் முதல் தென்காசி வரை பேருந்து வசதி செய்து கொடுத்தால் நாங்கள் அனைவரும் எங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் வாங்கி வருவதற்கு வசதியாக இருக்கும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.

இந்த கோரிக்கை மனு தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரிடம் கேரள மாநில திமுக அமைப்பாளரும் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளரும் நேரில் சென்று அளித்தோம். இந்த கோரிக்கையை ஏற்று உடனடியாக அம்பநாடு முதல் தென்காசி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பித்தார்கள்.

இதன் துவக்க விழா கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதி அம்பநாடு எஸ்டேட்டில் நாளை (2.1.2025-வியாழக் கிழமை) மாலை 5மணியளவில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் முன்னிலையில் தமிழக அரசின் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடி அசைத்து துவங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் விபின் முருகேசன், ஹரிகுமார் மற்றும் சிற்றார் ரவிச்சந்திரன், துரை பேச்சிமுத்து, மாவட்ட கழக செயலாளர்கள் ரெஜி ராஜ், மாம்பழத்துறை சலீம் ஸ்டீபன், ஆதவன், சதாசிவம், ஷாலினி, அஜ்மல், ராஜேஷ், ஷாம்லால், லால்ஜி, கீதா, அச்சு பிலால், நெவின், பிரின்ஸிஅன்னா மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர் இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், கரூர் மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண் 48, தென்றல் நகரில், ரூ. 16 லட்சம் மதிப்பில் மழை நீர் வடிகால் அமைத்திடும் பணிக்கு மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அடிக்கல் நாட்டினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

புத்தாண்டு வருகவே; புவிக்கினிமை தருகவே!

ஆங்கிலேயர்
போனாலும்
அகலாமல் திகழ்கின்ற
ஆங்கிலப் புத்தாண்டே;
அனைவர்க்கும்
பொதுவாண்டே!
ஈங்குனது வருகையை
இவ்வையம்
வரவேற்றுத்
தாங்காத களிப்பிலே
தழைத்தெங்கும் மகிழ்கிறது!

நீங்கிய ஆண்டிங்கு
நிகழ்த்திய எல்லாமே
தீங்குடன் நன்மையும்
சேர்ந்தபெருங் கலவையே!
தாங்கியே உரத்துடன்
தளராமல் உலகந்தான்
வீங்கிய போர்களால்
விழுத்துயர் கொண்டாலும்
ஏங்கியே போகாமல்
எழுச்சியில் தாழாமல்
தேங்கியே நில்லாமல்
தேய்ந்துதான் செல்லாமல்
தூங்கியும் கிடக்காமல்
தொலைந்துதான் போகாமல்
ஓங்கினாற்போல் பிறக்கின்ற
உலகுக்கோர் புத்தாண்டே!

மூங்கிலெழும் பண்ணாக
முற்றிலும் இனிமையாய்ப்
பாங்கெலாம் பசுமையே
படர்ந்தின்பம் பயந்திட
மாங்குயில் இசைபாட
மாமயில் நடம்புரிய
தேங்கமழ் மலர்களின்
தெவிட்டாத மணம்விரிய
ஓங்கலில் எழும்அருவி
ஓடைகளாய்ப் பாய்ந்திட
யாங்குமே சிலிர்த்திடும்
யாழ்ஒலி மேவிடப்
பூங்கிளைகள் காற்றிலாடப்
புள்கூட்டம் ஊசலிட,

தீங்குகள் யாருமே
சிந்தையிலும் எண்ணாமல்
வாங்குதல் இல்லாமல்
வழங்கிடும் உயர்வுபெறத்
தூங்குதல் காணாமல்
சுடருடன் செயலாற்ற
ஏங்குவோர் இல்லாமல்
எல்லோரும் உவகையுறத்
தேங்காத காவிரிபோல்
தெளிவான உளம்பெற
நீங்கியே வறுமையும்
நிலவியே வளமையும்
ஓங்கியே இனிமையும்
உலவிட அமைதியும்
ஆங்காங்கும் நட்புறவாய்
அகமொன்றும் பேரன்பாய்
ஈங்கொரு புத்துலகம்
எல்லோர்க்கும் பொதுவுலகம்
நாங்களும் காணவே
நல்லாண்டாய்
வருகவே!

பேராசிரியர்
மா.செல்வராசன்

அறியாமை முற்றிலும்
அகன்றிங்கே பகுத்தறிவு
செறிவான தன்மானம்
செல்வமாய்ச் செழித்திட
நெறியான செயல்களை
நெஞ்சந்தான் விழைந்திடக்
குறிக்கோளை
மறவாமல்
கொள்கையைத் துறவாமல்
உறவினை முறிக்காமல்
உரிமையைப் பறிக்காமல்
நறவினைக் கொல்கின்ற
நஞ்சென்று கருதாமல்
வெறியான சாதிமத
வெங்கொடுமை
புரியாமல்
பறிக்காமல் பசப்பாமல்
பருக்கைக்கும் பொய்யாமல்
மறிக்காமல் மணித்தமிழ்
மலர்ந்திடப்
புத்தாண்டே
சிறந்திங்கு வருகவே;
செழிப்புகள் தருகவே!

கொலைகளும் களவுகளும்
கொடுங்காம வெறிகளும்
புலையரின் செயல்களும்
பொறுத்திடாத் தீமைகள்!
உலையாகும் நெஞ்சந்தான்
ஒவ்வொன்றும் நிகழ்கையில்!
இலையாகும் இவையெலாம்
இங்கினிமேல் என்கின்ற
நிலையினைக் காணவே
நெறிகளைப் பேணவே
தலையாக முயலுவோம்;
தடுத்திங்கே முறித்திடுவோம்!

கலைகளும் கல்வியும்
கனிவுடன் துணிவுமே
மலைகளாய் உயரவே
மக்களும் ஒழுகவே
அலையாத எண்ணமும்
அஞ்சாத நெஞ்சமும்
விலையாகப் போகாமல்
விளங்கிடும் வீரமும்
குலையாத உறுதியும்
கோணாத உள்ளமும்
கலையாத வானம்போல்
காட்சிதரப் புத்தாண்டே
தொலையாத இன்பத்தைத்
தொடர்ந்திங்கு வழங்கவே
தலைநாளில் எழுகவே;
தமிழ்நாடு தழைக்கவே!

பெரியாரும் அண்ணாவும்
பீடுற்ற கலைஞரும்
சரியாக உரைத்தவை;
தமிழருக்கு உயர்ந்தவை!
பரிவாகத் தளபதியும்
பழுதின்றிப் பின்பற்றி
அரிதான செயல்களை
அயராமல் ஆற்றுவதால்
விரிவான தமிழ்நாடு
விரைந்துலகில்
முன்னிற்க
உரித்திருளை விரட்டிடும்
உதயசூரியன்
எழுப்பி,
தருகவே வெற்றிகள்!
தழைத்திடும் பெற்றிகள்!
பெருகவே நலங்களும்;
பெரும்பொருள் வளங்களும்;
வருகவே புத்தாண்டே;
வையத்தின் பொதுவாண்டே!

18ம் தேதி சென்னையில் நடைபெறும்

மாநில வழக்கறிஞர் மாநாட்டில் திரளாக பங்கேற்க முடிவு!

சிவகங்கை மாவட்ட வழக்கறிஞரணி தீர்மானம் !

சிவகங்கை, ஜன.1-

சிவகங்கை மாவட்ட கழக வழக்கறிஞரணி நிர்வாகிகள் கூட்டம் சிவகங்கை தெற்கு ஒன்றிய அலுவலகமான தலைவர் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ். பாஸ்கரன் தலைமையில் வழக்கறிஞர் ஆதி. அழகர்சாமி முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வருகிற 18ஆம் தேதி சென்னையில் நடைபெற வுள்ள மூன்றாவது வழக்கறிஞரணி மாநாடு குறித்து தமிழக கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் தலைமை கழக வழக்கறிஞர் அ. கலாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினார் கள். இந்த கூட்டத்தில் வழக்கறிஞர்கள் சன் சிவக்குமார், ஆர். பிரபாகரன், சுந்தர், முத்துராம லிங்கம், அண்ணாமலை, பாண்டியன், துசாந்த் பிரதீப்குமார் ,தினேஷ் குமார், கோதண்டராமன், என். செந்தில்குமார் , உமாபதி திருமதி ஆனந்தி, விஜய் நிர்மலா, துரைப்பாண்டி பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டார்கள் கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

1.வருகிற 18ஆம் தேதி சென்னையில் நடைபெற உள்ள மாநில வழக்கறிஞர் அணி மூன்றாவது மாநாட்டில் சிவகங்கை மாவட்டத்திலிருந்து அதிக அளவில் வழக்கறிஞர்கள் ங்கள் பங்கேற்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

2. நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் கழக தலைவர் தளபதி அவர் கள் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற வழக்கறிஞர் கள் கழக நிர்வாகிகளுடன் இணைந்து முழு அளவில் தேர்தல் பணியாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது

. முடிவில் வழக்கறிஞர் துரைவேலன் நன்றி கூறினார்.

சிவகங்கையில் நடைபெற்ற மாவட்ட வழக்கறிஞரணி நிர்வாகிகள் கூட்டத்தில் கழக வழக்கறிஞரணி துணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் தலைமைக் கழக வழக்கறிஞர் அ.கலாநிதி சிறப்புரையாற்றினார். மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் வரவேற்றுப் பேசினார்.